மாகாணக் கல்வித் திணைக்களம் - வடமாகாணம்

க.பொ.த சாதாரண தரப் பரீட்சை

இரண்டாம் தவணை – 2018

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| வரலாறு II | | 33 | T | II | | மூன்று மணித்தியாலம் |

- ❖ **பகுதி Iஇன் முதலாம் வினா கட்டாயமானது.**
- ❖ **பகுதி II இல் இருந்து நான்கு வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து ஒரு வினாவுக்கும் விடை எழுதுக**
- ❖ **எல்லாமாக ஆறு வினாக்களுக்கு விடை எழுதுக.**

## பகுதி I

1. (அ) கீழே (i) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள இலங்கைப் படத்திலும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள எல்லா வரலாற்று இடங்களையும் தரப்பட்டுள்ள உலகப் படத்திலும் குறித்துப் பெயரிடுக.

(i) களனி கங்கை, குருளு வாவி, ஆனையிறவு, நீர்கொழும்பு, நாச்சதுவ வாவி, பல்லவங்க, ஹெமன்ஹயில், மினிஹாகல்கந்த, வளவைகங்கை, இப்பன்கட்டுவ, மினிப்பேஅணை, கற்பிட்டி (12 புள்ளிகள்)

(ii) கோவா, கருங்கடல், பத்தேவியா, கொரியக்குடாநாடு, மலாக்காநீரிணை, வெனிஸ் (06 புள்ளிகள்)

(ஆ)(i) பின்வரும் A,B,C,D ஆகிய வரலாற்றுத் தகவல்களுடன் தொடர்புடைய நபர்களை ஒழுங்கு முறையில் உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A – மிருகங்களை எவரும் கொல்லக்கூடாது என முதலில் சட்டம் இயற்றிய மன்னன்.

B – மகா அஸ்தானகுமார என அழைக்கபட்ட கண்டி இராச்சிய இளவரசன்

C – கி.பி 1815 கண்டி உடன் படிக்கையில் ஆங்கிலேயர் ஆட்சியின் சார்பாக கையொப்பம் இட்ட இலங்கை ஆளுநர்.

D – 1ம் விஜயபாகு மன்னனின் பனாகடுவ செப்பு சாசனத்தில் அநுராதபுரத்துக்கு வழங்கப்பட்டிருந்த பெயர். (04 புள்ளிகள்)

- A, B ஆகியவற்றால் காட்டப்பட்டுள்ள படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினக்களுக்கான விடைளை வினா இலக்கங்களின் ஒழுங்கில் எழுதுக.

(II) 1. படம் A குறிக்கும் தூபியின் பெயர் -

2. இது எந்தமாவட்டத்தில் அமைந்துள்ளது -

3. இத்தூபியை அமைத்த அரசன் -

4. இத்தூபி சிறப்பிக்கப்படுவதற்கான காரணம் -



(A) (04 புள்ளிகள்)

(III)1. B படத்தில் காணப்படுபவரின் பெயர் என்ன?

2. இவர் எந்த அரசியல் கட்சியைச் சார்ந்தவர்-

3. இவரால் உருவாக்கப்பட்ட அரசியல் யாப்பு எது?

4. இவரது சிறப்புக்கு காரணம் என்ன?



(B) (04 புள்ளிகள்)

## பகுதி II

2. (i) இலங்கையின் வரலாற்றுக்கு முற்பட்ட காலப் பகுதிக்குரிய மனிதன் மரணச் சடங்கு நடவடிக்கையில் ஈடுபட்டமைக்கான சான்றுகள் கிடைத்த குகைகள் மூன்றினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(ii) வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்ற

(A) கரையோர வெட்ட வெளிகள் இரண்டையும் (B) தாழ்நில உலர் வலயக் குகைகள் இரண்டையும் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iii) முன் வரலாற்றுக்கால மக்களின் தொழில்நுட்ப வளர்ச்சியை எடுத்துக் காட்டும் இரு சான்றுகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(iv) வரலாற்றுக் காலத்தில் உருவாகிய குடியேற்றங்களின் பண்புகளை மூன்று காரணிகளின் துணையுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

3. (I) (அ) இலங்கையில் இரண்டாவது தடவையாகவும் முடி சூடிக்கொண்ட அநுராதபுர ஆட்சியாளன் -

(ஆ) வசபமன்னன் ஆட்சிகாலத்தில் யாழ் குடாநாட்டுக்கு வழங்கப்பட்ட பெயர்

(இ) அரசுகளுக்கு முற்பட்ட காலத்தில் குளத்தொகுதியைச் சேர்ந்த அனைத்துக் கிராமங்களையும் நிர்வகிப்பவர் (03 புள்ளிகள்)

(II) பின்வரும் தகவல்களுடன் தொடர்புடைய விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்குமுறையில் விடைத்தாளில் எழுதுக.

(A) புனித வெள்ளரசு மரக்கிளை கொண்டுவரப் பயன்பட்ட துறைமுகம் -

(B) பொலனறுவையை தலைநகரமாக தெரிவு செய்வதில் செல்வாக்கு செலுத்திய துறைமுகம் -

(C) அநுராதபுரத்தின் மேற்கே அமைந்த சர்வதேச துறைமுகம் -

(D) ஹேமமாலா இளவரசியாலும் தந்த இளவரசனாலும் புனித தந்தத்தாது கொண்டுவரப்பட்ட சிறிய கப்பல் தரிப்பிடம் -

[காலித்துறைமுகம்,மாந்தைத்துறைமுகம்,லங்காப்பட்டினம்,திருகோணமலைத்துறைமுகம், ஜம்புகோளப்பட்டினம், சிலாபம்] (04 புள்ளிகள்)

(III)இலங்கையில் வாழ்ந்த பல்லினமக்கள் முற்காலத்தில் இருந்தே ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்துள்ளனர். எச்சந்தர்ப்பத்திலும் அவர்கள் தமக்கிடையே குழப்பங்களை ஏற்படுத்திக் கொள்ள முயன்றதில்லை என்பதனை இரு காரணிகள் கொண்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(IV) இந் நாட்டை ஆண்ட துட்டகைமுனு மன்னனின் சேவைகள் மூன்றினை குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

4. (I) தென்மேற்கில் இராசதானிகள் உருவாகிய காலகட்டங்களில் இலங்கையுடன் வர்த்தகத் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்ட நாடுகள் மூன்றைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(II) பின்வரும் இராச்சியங்களை உருவாக்கிய மன்னர்களை ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(A) தம்பதெனியா -

(B) கம்பளை -

(C) கோட்டை -

(D) கண்டி - (04 புள்ளிகள்)

(III) புராதன நகரங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கான காரணிகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக. (05 புள்ளிகள்)

(IV) இரண்டாம் இராஜசிங்க மன்னன் தனது ஆட்சியின் போது எதிர்நோக்கிய சவால்கள் மூன்றைத் தந்து அவற்றை அவன் வெற்றி கொண்ட முறையையும் குறிப்பிட்டு விளக்குக. (06 புள்ளிகள்)

5. (I) போர்த்துகேயர் இலங்கை வரும் போது பின்வரும் அரசியல் பிரிவுகளை ஆட்சி செய்து கொண்டிருந்த மன்னர்களை ஒழுங்கு முறையில் தருக.

(அ) கோட்டை - (ஆ) மலையகம் - (இ) யாழ்ப்பாணம் -

(03 புள்ளிகள்)

(II) பின்வரும் தகவல்களுடன் தொடர்புடையவர்களை ஒழுங்குமுறையாகக் குறிப்பிடுக.

A - இலங்கைக்கு வந்த முதலாவது போர்த்துக்கேய குழுவின் தலைவன் –

B - கோட்டை இராச்சியம் பிரிக்கப்பட்டதன் பின் சீதாவாக்கையில் அரசனானவன் -

C - கண்டி அரசன் முதலாம் விமலதர்ம சூரியனைச் சந்தித்த ஒல்லாந்த தூதுவன் -

D - தந்துரே போருக்கு தலைமைதாங்கிய போர்த்துக்கேய தளபதி –(04 புள்ளிகள்)

(III) கோட்டை இராச்சியம் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்துக்கு உட்படுத்துவதற்கு அடிப்படையாக அமைந்த இரு காரணிகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(IV) எவ்வளவு முயன்றும் போரத்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் கண்டி இராச்சியத்தை ஏன் கைப்பற்ற முடியவில்லை என்பதனை மூன்று காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளக்குக. (06 புள்ளிகள்)

6. (I) இந்தியாவில் பிரித்தானியர்களால் நிறுவப்பட்ட வர்த்தக நிலையங்கள் மூன்றினைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(II) பிரித்தானியர் இலங்கையின் திருகோணமலைத் துறைமுகத்தின் மீது கவனம் செலுத்தியமைக்கான காரணங்கள் இரண்டினை குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(III) 1815ம் ஆண்டு பிரித்தானியரின் கண்டி மீதான படையெடுப்பு வெற்றி அடைந்தமைக்கான காரணங்கள் இரண்டை விளக்குக. (05 புள்ளிகள்)

(IV) (A) இந்நாட்டில் பௌத்த, இந்து, இஸ்லாம், சமய மறுமலர்ச்சியை ஏற்படுத்துவதில் முன்னின்று செயற்பட்டவர்கள் ஒவ்வொருவர் வீதம் ஒழுங்குமுறையில் குறிப்பிடுக.

(B) அவற்றுள் நீங்கள் விரும்பும் எவரேனும் ஒருவரின் சேவை பற்றி உதாரணங்களுடன் விளக்குக. (06 புள்ளிகள்)

7. (I) பின்வரும் விடயங்களுடன் தொடர்புபட்ட நபர்களை A,B,C ஒழுங்குமுறையில் தருக.

A – நகரப்புறத் தொழிலாளர்களின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக பாடுபட்ட தலைவர் -

B – தோட்ட தொழிலாளர்களுக்கான தொழிற்சங்கத்தை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்ட தலைவர் -

C – ஐக்கிய தேசியக் கட்சியைத் தோற்றுவித்தவர் - (03 புள்ளிகள்)

(II) 1978 யாப்பின் வாக்களிப்பு முறைகளின் படி அங்கத்தவர்களை தெரிவு செய்யும் தேர்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன.

(அ) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை பயன்படுத்தப்படும் தேர்தல் முறைகள் இரண்டு தருக.

(ஆ) நாடு முழுவதும் ஒரே தேர்தல் தொகுதியாகக் கணிக்கப்படும் தேர்தல் முறைகள் இரண்டு தருக. (04 புள்ளிகள்)

(III) டொனமூர் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் இரண்டினை விளக்குக.(05 புள்ளிகள்)

(IV) A – இலங்கைக்கு வருகை தந்த ஐரோப்பிய நாட்டவர்கள் முதலீடு செய்த வர்த்தக விவசாயப் பயிர்கள் இரண்டினைக் குறிப்பிடுக.

B – பிரித்தானியர் ஆட்சி காரணமாக இலங்கைக்கு கிடைத்த அனுகூலங்கள் இரண்டை விளக்குக. (2 + 4 =06 புள்ளிகள்)

## பகுதி III

8. (I) மறுமலர்ச்சிக் காலத்தில் இலக்கியத் துறைக்குப் பணியாற்றிய எழுத்தாளர்கள் மூவரைப் பெயரிடுக. (03 புள்ளிகள்)

(II) பின்வரும் விடயங்களுடன் தொடர்புடையவர்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்குமுறைப்படி குறிப்பிடுக.

A – புவிகோள வடிவமானது எனக் கண்டுபிடித்தவர் -

B – ஆபிரிக்காவின் தென்முனைக்கு புயல் முனை எனப் பெயரிட்டவர் -

C – அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்தவர் -

D - இறுதி இராப்போசனம் என்னும் சித்திரத்தை வரைந்தவர் -

(ஜொகன்னஸ் கெப்ளர், பர்த்தலோமேயுடயஸ், ரபாயல், கூடன்பேர்க், லியனாடோடாவின்சி, மைக்கல் ஆஞ்சலோ, நிக்லஸ் கொப்பனிக்கஸ்) (04 புள்ளிகள்)

(III) ஐரோப்பாவில் தோன்றிய மறுமலர்ச்சி உலகமயமாகியதற்கான இரு காரணிகளை விளக்குக. (05 புள்ளிகள்)

(IV) ஐரோப்பாவில் ஏற்பட்ட மறுமலர்ச்சியானது இலங்கையின் அரசியல், பொருளாதாரம், சமூக பண்பாடு ஆகியவற்றில் ஏற்படுத்திய தாக்கத்தினை விளக்குக.

(06 புள்ளிகள்)

9. (I) இங்கிலாந்து தவிர்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் கைத்தொழிற் புரட்சிபரவிய ஐரோப்பிய நாடுகள் மூன்றினைத் தருக.

(03 புள்ளிகள்)

(II) கைத்தொழிற்புரட்சி பிரித்தானியாவில் ஆரம்பித்தமைக்கான காரணங்கள் நான்கு தருக.

(04 புள்ளிகள்)

(III) கைத்தொழிற் புரட்சியின் விளைவால் உலகின் பொருளாதாத் துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டினைச் சுருக்கமாக விளக்குக

(05 புள்ளிகள்)

(IV) A – கைத்தொழிற் புரட்சியின் செல்வாக்கு காரணமாக துரித வளர்ச்சி ஏற்பட்ட மூன்று பிரதான துறைகளை குறிப்பிடுக.

B – அவற்றுள் ஒன்றின் வளர்ச்சியை விளக்குக.

(06 புள்ளிகள்)